# சி.எஸ்.ஐ. தமிழ் திருச்சபை, அபுதாபி

THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA



# தூது

நற்செய்தி துணுக்குகள்

## மார்ச் 2024 (மடல் - 24) செய்தி-3

**கிருபை பெற்றவளே வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான். லூக்கா *1:28b***

## பொருளடக்கம்




| | |
|---|---|
| ஆயர் மடல் | 2 |
| ஆயரம்மா மடல் | 4 |
| பெண்கள் பகுதி | 6 |
| Children's Corner | 9 |
| வேத வினாக்கள் | 20 |
| கோதுமை மணி | 23 |
| துணுக்குகள் | 25 |
| ஆலய பக்கம் | 27 |

# ஆயர் மடல்

**“இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி.”** யோவான் 1:29

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துகிறேன். கடந்த மாதம் முழுவதும் ஆண்டவர்நம்மைப் பாதுகாத்து பாரமரித்து வழிநடத்தி வந்திருக்கிறார், ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். குறிப்பாக நமது திருச்சபையின் picnic சிறப்பாக நடைபெற ஆண்டவர் கிருபை செய்தார். நமது அன்பையும் ஐக்கியத்தையும் மற்றவர்களோடு பகிர்ந்துகெள்ளவும், நமது உறவுகளை வலுப்படுத்திக்கொள்ளவும் வாய்பாக இருந்ததற்காக ஆண்டவரை துதிக்கிறேன். இந்த புதியமாதம் நமக்கு ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் அருள்செய்வாராக.

இந்த உலகத்தில் நாம் அனைவரும் வாழவேண்டும் என்றுதான் பிறந்திருக்கிறோம். வாழவேண்டும் என்று பிறந்தாலும், மரணம் நம்மைத் தழுவுகிறதை நம்மால் தவிர்க இயலாது. ஆனால் இந்த உலகத்தில் மரிப்பதற்காகவே ஒருவர் பிறந்தார் என்றால் அவர் இயேசு கிறிஸ்து மட்டுமே. யோவான்ஸ்நானன் இயேசுவை அறிமுகப்படுத்தும் பொழுது, **இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி** என்கிறார். இயேசு கிறிஸ்துவை பலியிடப்படுகின்ற பஸ்கா ஆட்டுக்குட்டி என்று அழைக்கிறார். பழைய ஏற்பாட்டு ஆராய்ச்சியாளர்களில் பலர், **பஸ்கா நாடோடி வாழ்க்கைச் சூழலில் இருந்த ஒரு பண்டிகையாகக் கருதுகின்றனர்.** பெரும்பாலும் ஆடுமாடுகளை மேய்கின்ற மேய்ப்பர்கள், ஒரு மேய்ச்சல் நிலத்தை விட்டு மற்றொரு மேய்ச்சல் நிலத்துக்குச் செல்லும்பொழுது, பலி செலுத்துவது வழக்கம். ஏனென்றால், பழைய காலத்தில் ஒவ்வொரு நிலப்பரப்புக்கும் தனித்தனி பாதுகாக்கும் தெய்வங்கள் இருப்பதாக நம்பினார்கள். எனவே, ஒரு நிலப்பரப்பை விட்டு மற்றொரு நிலப்பரப்புக்கு மேய்ச்சலுக்குச் செல்லும் பொழுது அந்த தெய்வங்களுக்குப் பலி செலுத்தி, அந்த தெய்வங்களை திருப்திப்படுவது வழக்கமாக இருந்தது. இந்தப் பலியில் இரத்தம் முக்கியமானது. இரத்தம் தெய்வங்களைத் திருப்திப்படுத்துவதாகவும் நம்பப்பட்டது. இவ்வாறு நாடோடி மக்கள் மத்தியில் காணப்பட்ட இந்தப் பலி இஸ்ரவேல் மக்களின் விடுதலை வரலாற்றோடு இணைக்கப்பட்டுப் புது அர்த்தம் கொடுக்கப்படுகிறது. இஸ்ரவேல் மக்கள் எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டதற்கு அடையாளமாக இந்த பஸ்கா விருந்து கொண்டாடப்பட்டது. பஸ்கா விருந்தில் மூன்று முக்கிய கருத்துக்கள் வலியுறுத்தப்படுகின்றன.

**1.பகிர்வு:**

பஸ்கா விருந்தில், ஒரு ஆட்டுக்குட்டி ஒரு குடும்பத்திற்குக் கூடுதலாயிருக்குமென்றால் அதனை அடுத்த குடும்பத்தோடு பகிர்ந்து கொள்ளவேண்டும். மீட்பின் மகிழ்சி அனைவருக்கும் உரியது, எனவே அனைவரோடும் பகிர்ந்து கொண்டார்கள். அதேபோன்று பஸ்கா ஆடாகிய இயேசு கிறிஸ்து உலகமக்களின் மீட்புக்காகத் தம்மையே பகிர்ந்து கொடுக்கிறார். கடவுளின் மீட்பு அனைவருக்கும் உரியது. ஆனைத்துலக மக்களுக்காகவும் இயேசு கிறிஸ்து மரித்தார். மீட்பை பெற்ற நாம் மகிழ்வின்

நற்செய்தியையும், நமக்குறியதையும் மற்றவர்களுக்கு பகிர்ந்து கொடுக்க முன்வரவேண்டும்.

**2. ஒருமைப்பாடு:**

பஸ்கா விருந்தில் குடும்பத்தினர் அனைவரும் ஒன்றாகக் கூடி, பஸ்கா விருந்தைக் கொண்டாடினார்கள். முழு குடும்பமும் ஒன்றாக அமர்ந்து தீவிரமாகப் புசித்தார்கள். நாம் பஸ்கா ஆடாகிய இயேசு கிறிஸ்துவின் திருவிருந்தில் பங்கு பெறுவதன் வழியாக கிறிஸ்து இயேசுவோடும் மற்றவாகளோடும் ஒன்றாய் ஐக்கியப்பட்டிருக்கிறோம் என்பதை வெளிப்படுத்துகிறோம்.

**3. பாவ மன்னிப்பு :**

இஸ்ரவேல் மக்கள் இரத்தத்தை உயிரின் இருப்பிடமாகக் கருதினார்கள். (லேவி 17:11,14) பலியிடப்பட்ட மிருகத்தின் இரத்தம் பக்தர்களின் பாவங்களை மறைத்து, கடவுளின் கோபத்தைத் தணிக்கிறது என்று நம்பப்பட்டது. அதோடு இந்த இரத்தம் நம்மைத் தீமைக்கு விலக்கிக் காக்கும் என்றும் நம்பினார்கள். ஏனெனில், எகிப்தில் தலைப்பிள்ளை சங்காரத்தூதன், இரத்தம் தெளித்த வீட்டைக் கடந்து சென்றான். எனவே, இஸ்ரவேல் மக்களின் தலை ஈற்றுக்கள் அனைத்தும் காக்கப்பட்டது.

பஸ்கா பலி வழியாக இஸ்ரவேல் மக்களுக்கு எப்படி மீட்பு கிடைத்ததோ அதே போன்று, இயேசுவின் இரத்தத்தினாலே நமக்கும் மீட்பு கிடைத்திருக்கிறது. (பேதுரு.1:18,19) எல்லாவற்றிற்கும் மேலாக இயேசுவின் பலி நம்மை தியாக வாழ்க்கைக்கு நேராக அழைக்கிறது. பிறருக்காகவே வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம். இயேசுவைப் பின்பற்றி இயேசுவைப் போலத் நமது வாழ்க்கையை தியாகப்பலியாகப் படைக்க வேண்டும். (எபே.5:2, ரோமர். 12:1) பிறருக்காக வாழுவோம் ஆண்டவர் நம்மை ஆசீர்வதிப்பாராக.


*Res. : 02 6791915*
*Mobile : 054 7401421*
*mail : asamuelrev@gmail.com*

***கிறிஸ்துவின் பணியில்***
***தங்கள் அன்பிற்குரிய ஆயர்***
***Rev. Dr. A. Samuel***


ஏப்ரல் மாத தலைப்பு

# நற்செய்திபணி

# [Evangelism]

# ஆயரம்மா மடல்

***கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே!***

நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக. கடந்த காலங்கள் முழுவதும் ஆண்டவர் நம்மையும் நம்முடைய குடும்பத்தையும் அற்புதமாக ஆச்சரியமாக பாதுகாத்து வழிநடத்தி வந்ததற்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துகிறேன். இந்த புதிய மாதம் நமக்கும் நம்முடைய குடும்பங்களுக்கும் ஆசீர்வாதமாக இருக்க ஆண்டவர் கிருபை செய்வாராக.

***"அவள் இருந்த வீட்டில் தேவதூதன் பிரவேசித்து: கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான்."***

***லூக்கா 1:28.***

மார்ச் மாதம் 8ஆம் நாளை ***அனைத்துலகப் பெண்கள் தினமாக*** (International Women's Day) ஆண்டு தோறும் உலகெங்கும் கொண்டாடப்படுகிறது. அதே நாளில் நமது திருச்சபையின் பெண்கள் சிறப்பு ஆராதனையில் பங்குபெறவும் இருக்கிறோம். ஆண்டவர் பெண்களைப் படைத்து மனிதனுக்கு ஏற்றத் துணையாக ஏற்படுத்தியதற்காக ஆண்டவரை ஸ்தோத்தரிக்கவும். குறிப்பாக குடும்பத்திலும், சமுதாயத்திலும் திருச்சபையிலும் பெண்கள் ஆற்றிவருகின்ற மகத்தானப் பணிகளுக்காக ஆண்டவருக்கு நன்றி செலுத்துவும் அழைக்கப்படுகிறோம். இயேசுவின் தாயாகிய மரியாளுக்கு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து என்னும் உலக ரட்சகர் உன் வழியாகப் பிறப்பார் என்கிற நற்செய்தி தேவ தூதனால் சொல்லப்படுகிறது. இந்த நாளை ***மங்களவாக்குத் திருநாளாக நாம் கொண்டாடுகிறோம்.*** (மார்ச் 25) இதனை நினைவுபடுத்தும் விதமாக ஆலயங்களில் பெண்கள் சிறப்பு ஆராதனை நடத்தப்படுகிறது. எனவே பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்ட, பெண்களுக்கு பெருமைத்தேடித்தந்த இயேசுவின் தாயாகிய அன்னை மரியாளைக் குறித்து கற்றுக்கொள்வோம்.

***a) ஆச்சரியப்பட்ட மரியாள்:***

கர்த்தரின் தூதன் மரியாளை சந்திக்கிறான். எளிய கிராமத்துப் பெண், நேரடியாக தேவதூதனை சந்திக்கும்பொழுது நிச்சயமாக மரியாள் அச்சப்பட்டிருப்பார்கள். மரியாள் கிராமத்துப் பெண் என்றாலும் சிந்திக்கின்ற ஆற்றல் பெற்ற பெண். தூதனின் வாழ்த்து செய்தியைக் குறித்து சிந்தனை செய்கிறாள். (லூக்கா 1:29) அதோடு, தூதனின் திருவாக்கைக் கேட்ட மரியாள் ஆச்சரியப்படுகிறாள். கன்னிப் பெண் காப்பவதியாவது உலக வழக்குக்கு மாறானது. எனவே, இது மரியாளுக்கு ஆச்சரியத்தைக் கொடுக்கிறது. ***இது எப்படியாகும்? நான் புருஷனை அறியேனே*** என்கிறாள். கடவுளின் வார்த்தையை உறுதிப்படுத்துவதற்காக எலிசபெத்தை முன்நிறுத்தி மரியாளின் ஐயத்தைப் போக்குகிறான் தூதன். வயது முதிர்ந்த வேளையில், இனி குழந்தைப்பிறக்க வாயிப்பில்லாதச் சுழலில், எலிசபெத்து கருவுற்றிருக்கிறாள் என்கின்ற செய்தி மரியாளுக்கு நம்பிக்கையைக் கொடுக்கிறது.

b) ***சஞ்சலப்பட்ட மரியாள்:***

தேவதூதன் மரியாளின் வீட்டுக்குள் பிரவேசித்து: கிருபை பெற்றவளே, வாழ்க, கர்த்தர் உன்னுடனே இருக்கிறார், பெண்களுக்குள் நீ ஆசீர்வதிக்கப்பட்டவள். (லூக்கா 1:28) என்கின்ற வாக்குறுதி அன்னை மரியாளுக்கு மகிழ்வை கொடுத்தாலும், கன்னி கருவுற்றதை இந்த உலகம் எப்படி கவனிக்கும்? நாசரேத்து ஊர் மக்களின் அவச்சொல்லை எப்படி எதிர்கொள்வது? என்கின்ற தயக்கமும் அச்சமும் நிச்சயமாக மரியாளின் உள்ளத்தில் இருந்திருக்கும். அதோடு தான் யோசேப்புக்கு நிச்சயக்கப்பட்டவள். தனது எதிர்கால கணவரின் உள்ளத்தில எழும் ஐய்யத்தைப் போக்குவது எப்படி? என்கின்ற கவலையும் நிச்சயமாக மரியாளை பாதித்திருக்கும்.

உ) ***அர்பணித்த மரியாள்:***

தூதனின் வாக்குறுதியைக் கேட்ட மரியாள் தன்னை முழுவதுமாக ஆண்டவருக்கு அர்பணிக்கிறார். இதோ நான் ஆண்டவருக்கு அடிமை உம்முடைய வார்த்தையின்படியே எனக்கு ஆகக்கடவது என்றாள். (லூக்கா 1:38) உலகத்தை மீட்கின்ற ஆண்டவரை சுமக்குகின்ற பாக்கியத்திற்காக எந்த அவமானத்தையும் துன்பத்தையும் சகித்துக்கொள்ள தன்னை அர்பணிக்கிறார். எனவே பெண்களில பேறுபெற்றவள் என்பதோடு, ஆண்டவரின் தாயார் என்று அழைக்கின்ற பாக்கியத்தையும் அன்னை மரியாள் பெற்றுக்கொள்கிறார். நமது தனிப்பட்ட வாழ்வில், குடும்பவாழ்விலும், சமுதாய வாழ்விலும், திருச்சபை வாழ்விலும், பலவிதமான பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டிய சூழல் நமக்கு ஏற்படுகிறது. எப்படி பிரச்சனைகளை எதிர் கொள்வது என்கின்ற அச்சமும் எழுவதுண்டு. ஆனால் இயேசுவின் தாய்யாகிய அன்னை மரியாளைப்போன்று நம்மை முழுவதுமாக ஆண்டவருக்கு அர்பணிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். கர்த்தரின் சித்தத்திற்கு முழுவதுமாக நம்மை கையளிக்கும்பொழுது இந்த சமுதாயத்தில் பேருபெற்றவாகளாக ஆண்டவர் நம்மை உயர்த்துகிறார். இந்த புதிய மாதத்திலும் ஆண்டவர் நம்மை மகிழ்சியினால் வழிநடத்தி ஆசீர்வதிப்பாராக.

***மீட்பரின் பணியில்***
**Mrs. S. *ஜெபா சாமுவேல்***
**ஆயரம்மா**

## புத்திசாலியும் ரூபவதியுமான அபிகாயில்



புத்திசாலியும் ரூபவதியுமான அபிகாயில் என்னும் பெண், மாகோனைச் சேர்ந்த நாபால் என்னும் வசதிபடைத்த நபரின் மனைவியாய் இருந்தாள். அவனுக்கு கர்மேலில் தொழில்துறை இருந்தது. அவன் மிகுந்த வசதி படைத்தவனாய் இருந்தாலும் முரடனும் துராகிருதனுமாயிருந்தான் என்று வேதம் கூறுகிறது (1சாமு.25).

**தாவீதின் வேண்டுகோள்**

நாபால் தன் ஆடுகளுக்கு மயிர் கத்திரிக்கிறதை அறிந்த தாவீது, தன் ஆட்களை அவனிடம் அனுப்புகிறான். நாபாலுக்கு வாழ்த்துதல் சொல்லவும், அவனுடைய கைக்கு உதவுவதை, அவனுடைய குமாரனாகிய தாவீதுக்கும் அவனுடைய ஊழியக்காரருக்கும் கொடுக்கும்படி வேண்டிக்கொள்ளவும் சொல்லியனுப்புகிறான்.

**நாபாலின் பதில்**

மிகவும் தாழ்மையோடு வேண்டுகோள் விடுத்த தாவீதின் வேலைக்காரரிடம் சீறுகிறான் நாபால். தாவீது என்பவன் யார்? என்று கேட்டதோடு, என் அப்பத்தையும் என் தண்ணீரையும் அறியாத மக்களுக்கு தரமாட்டேன் என்று கூறி அனுப்பிவிட்டான்.

**தாவீதின் முடிவு**

நாபாலின் பதிலைக் கேட்ட தாவீது, ஏறக்குறைய 400 பேரைக் கூட்டிக்கொண்டு, பட்டயத்தோடு நாபாலுக்குரிய அனைத்தையும் அழித்துப்போட வேண்டும் என்ற நோக்கத்தோடு நாபாலின் வீடு நோக்கி புறப்பட்டான்.

**அபிகாயிலின் சமயோசிதப் புத்தி**

தாவீதின் திட்டத்தை அறிந்த நாபாலின் வேலைக்காரன் ஒருவன் ஓடிவந்து, நாபாலின் குடும்பத்திற்கும், அவன் ஆட்களுக்கும் வரவிருக்கும் பொல்லாப்பை குறித்து அபிகாயிலிடம் கூறினான். அபிகாயில் ஒரு சாதாரணப் பெண்ணாக இருந்தால், அதிர்ந்து போய் இருப்பாள். அல்லது கூப்பாடு போட்டு தன் கணவனிடம் சண்டை போட்டிருப்பாள். ஆனால் அவள் காலத்தை வீணாக்காமல், தன் மேய்ப்பர்களுக்கு மதிலாய் இருந்த தாவீதையும் அவன் ஆட்களையும், அப்பங்கள், திராட்சரசம், சமைத்த ஆடுகள், வறுத்த பயறு, வற்றலாக்கப்பட்ட திராட்சக்குலைகள், வற்றலான அத்திப்பழ அடைகள் ஆகியவற்றை தேவையான அளவு எடுத்துக்கொண்டு, கழுதைகள் மேல் ஏற்றி, வேலைக்காரரை முன்னாக அனுப்பி, அவர்களுக்கு பின்னாக செல்கிறாள். தான் போகிறதைக் குறித்து தன் கணவனாகிய நாபாலிடம் கூறவில்லை.



வழியில் தாவீதைக் கண்டதும், தீவிரமாய் கழுதையை விட்டு இறங்கி, முகங்குப்புற விழுந்து பணிந்து, என் ஆண்டவனே இந்த பாதகம் என் மேல் சுமரட்டும். நாபால் பேருக்கேற்ப பேலியாளின் மனுஷனாயிருக்கிறான். நடந்த ஒன்றையும் நான் அறியவில்லை. நீர் இரத்தம் சிந்த கர்த்தர் இடம் கொடுக்கவில்லை என்று கூறி தாவீதுக்கு விரோதமாக பொல்லாப்புத் தேடுகிறவர்கள் நாபாலைப் போல ஆகக்கடவர்கள் என்றாள். அதோடு கூட தான் கொண்டு வந்த அனைத்தையும் காணிக்கையாக ஏற்றுக் கொண்டு, தாவீதோடு கூட உள்ள

வாலிபருக்கு கொடுக்கும்படி வேண்டிக்கொண்டாள். உமது அடியாளின் பாதகத்தை மன்னியும் என்று கூறி, தாவீதை ஆசீர்வதித்து, நீர் இஸ்ரவேலுக்கு அதிபதியாகும்போது அடியாளை நினைத்தருளும் என்று கூறினாள்.

அபிகாயிலின் வார்த்தைகளைக் கேட்ட தாவீது மனம் மாறி, தான் இரத்தம் சிந்தாமல் தடுத்ததற்காக நன்றி கூறி அவள் காணிக்கைகளை பெற்று, அவளை ஆசீர்வதித்து திரும்பி செல்கிறான்.

**தாவீதின் மனைவியான அபிகாயில்**

தாவீதை சந்தித்து வீடு திரும்பிய அபிகாயில், பொழுது விடிந்து, தன் கணவன் குடிவெறியில் இருந்து தெளிந்தபின் நடந்ததை கூறுகிறாள். நாபால் கல்லைப் போல் மாறினான். கர்த்தர் நாபாலை வாதித்ததினால் பத்துநாளுக்குப் பின்பு அவன் செத்தான். நாபால் இறந்ததை அறிந்த தாவீது அவளைத் தன் மனைவியாக்கிக் கொண்டான். ஒரு குடிகாரனோடு வாழ்க்கை நடத்தி வந்த புத்தியுள்ள அபிகாயிலுக்கு ஒரு மறுவாழ்வு கிடைத்தது.

**அபிகாயிலிடம் காணப்பட்ட பிரமிப்பூட்டும் பாடங்கள்**

- அபிகாயிலின் ஞானம் ஒரு மாபெரும் சண்டையைத் தடுத்தது. செல்வம் மனிதனைக் காப்பதில்லை, ஞானம் காக்கும்.
- நன்றி செலுத்தும் பண்புள்ளவளாய் இருந்தாள் அபிகாயில்.
- தன் கணவன் செய்த தவறுக்காக, தாவீதிடம் மன்னிப்பு கேட்கிறாள். செல்வந்தனின் மனைவியாய் இருந்தாலும், பணிவு நிறைந்த, கர்வமற்ற குணாதிசயம் உள்ளவாய் இருந்தாள்.
- தன் வேலைக்காரனின் பேச்சை அசட்டை செய்யாமல், அதை மதித்து, உடனடியாக முடிவு எடுக்கிறாள். அவளுடைய 'கேட்கும்' குணமும், சாதுர்யமும், ஞானமும், கரிசனையும் இதில் வெளிப்படுகிறது.
- அபிகாயிலின் பொறுமை, அவளை நாபாலிடம் சண்டை போடுவதைத் தவிர்த்தது. கர்த்தரை முன்னிறுத்தி தாவீதிடம் பேசியது, அவளுடைய தெய்வபயத்தைக் காட்டுகிறது.
- அபிகாயிலின் தைரியம், தாவீதை எதிர்கொண்டு அவன் முன் நின்று அவளை ஞானமாய் சாந்தமாய் பேச வைத்தது.

"புத்தியுள்ள மனைவி தன் வீட்டைக் கட்டுகிறாள்" என்பதின் படி, ஒரு புத்தியுள்ள பெண்ணாயிருந்து தன் வீட்டையும், தன் வேலைக்காரர் மற்றும் அனைத்தையும் அழிந்து போகாமல் காத்துக்கொண்டாள் அபிகாயில். அதன் விளைவாக துஷ்ட மனுஷனின் கரத்திலிருந்து தப்பி, எதிர்காலத்தில் அரசனாகப்போகும் தாவீதின் மனைவியானாள்.

நாமும், நம் குடும்பமோ, சொந்தமோ, சுற்றியுள்ள உலகமோ எப்படிப்பட்டதாய் இருந்தாலும், நம்மை எதிர்கொண்டு வர இருக்கும் மணவாளனாகிய இயேசுவை சந்திக்க, தகுந்த ஆயத்தத்தோடு தைரியமாய் அவரை எதிர்கொண்டு செல்லும் மணவாட்டியாய் நம்மை இந்த லெந்து காலத்தில் ஆயத்தப்படுத்திக்கொள்வோம். நம் இயேசுவின் இரண்டாம் வருகைக்கு நம்மை ஆயத்தப்படுத்தும் நாட்களாய் இந்த லெந்து காலம் அமையட்டும்.

**ஜெபசீலி ஆசீர்**

## திருமறையில் பெண்கள்

திருமறையில் பெண்களின் பங்கு மிகவும் போற்றுதற்குரியது. இயேசுகிறிஸ்துவின் நாட்களிலும், ஆதி திருச்சபையிலும் விசுவாசம், ஜெபம், சுவிசேஷம் அறிவித்தல் போன்றவற்றில் பெண்கள் சிறந்து விளங்கியதை நாம் பார்க்க முடிகிறது.

திருமறையில் பெண்ணை, அழகுப்பெண், சித்திரந்தீர்த்த மூலைக்கல், வியாபாரக் கப்பல், குணசாலி, பாக்கியவதி, கனி தரும் திராட்சக்கொடி என்றெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. சித்திரந்தீர்த்த மூலைக்கல் என்பதை சங்கீதம் 144:12-ல் பார்க்கிறோம். எங்கள் குமாரத்திகள் **சித்திரந்தீர்த்த அரண்மனை மூலைக்கற்கள்**. அவர்கள் கர்ப்பத்தின் கனி குமாரத்திகள், கற்கள் போன்று இருப்பவர்கள். கல் உறுதியானது. நிலைத்து நிற்கும் தன்மையுடையது. அதே போல் தான் பெண்கள் மன உறுதியுள்ளவர்கள். காரணம், கர்த்தர் மேல் கொண்டிருக்கும் நம்பிக்கையும் விசுவாசமும். உதாரணமாக அன்னாள்-ஜெபத்தில் உறுதியாய் இருந்தவள், சாராள்-கர்த்தருடைய வாக்குத்தத்தத்தை நம்புவதில் உறுதியாயிருந்தாள். மிரியாம், இயேசுவின் தாய் மரியாள் - இவர்கள் உறுதியான மனநிலைக் கொண்டவர்கள்.

குணசாலியான பெண் வியாபாரக் கப்பலைப் போலிருக்கிறாள். அவளுடைய விலை முத்துக்களைப்பார்க்கிலும் உயர்ந்தது. அவளிடம் காணப்படும் நற்செயல், நற்குணம், சுறுசுறுப்பு, உண்மை, ஒழுக்கம், கட்டுப்பாடு போன்ற குணங்கள் முக்கியமாக குணசாலியான பெண்ணிடம் துணிவு, பணிவு, கனிவாக காணப்படுகிறது.

திருமறையில் பெண்கள் பாக்கியவதி என்று சொல்லப்பட்டார்கள. பாக்கியம் என்பது எல்லாருக்கும் கிடைக்காத அரிதான ஆசீர்வாதம். குணசாலியான பெண்ணை அவளுடைய பிள்ளைகள் எழுந்து பாக்கியவதி என்று புகழுவதற்கு காரணம் தங்கள் தாயாரிடம் காணப்பட்ட பண்புகளே. குணசாலியான பெண் - நற்குணசாலி, புருஷனின் நம்பிக்கைக்குரியவள், நன்மையை மட்டும் செய்பவள், உற்சாகமுடையவள், அதிகாலையில் எழும்பி பணி செய்பவள், சாமர்த்தியமானவள், ஆரோக்கியத்தை பேணுபவள், அறிவு கூர்மையுடையவள், சுறுசுறுப்பாய் விழித்திருந்து பணிபுரிபவள், தயவுடன் கூடிய தாராள குணமுடையவள், கணவன் புகழ் பெற காரணமானவள், வருங்கால நம்பிக்கையுடையவள், சோம்பலில்லாதவள், சிறந்த மனைவி, சிறந்த தாய், கர்த்தருக்கு பயந்து திருப்தியாய் வாழ்பவள், அனைவராலும் பாராட்டப்படுபவள்.

திருமறையில், மனைவியை "கனிதரும் திராட்சைக் கொடியாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இயேசுகிறிஸ்து திராட்சை செடி, நாம் கொடிகள். கொடி திராட்சை செடியுடன் இணைந்திருக்க வேண்டும். செடி விரும்புவதையே கொடி செய்ய வேண்டும். திராட்சை செடியாகிய பெண் கிறிஸ்து இயேசுவாகிய செடியில் நிலைத்திருக்கும்போது மட்டுமே, மிகுந்த கனி நிறைந்த வாழ்வை தன் இல்லத்தில் பகிர முடியும்.

திராட்சைத் தோட்டத்தின் உரிமையாளராகிய இயேசுகிறிஸ்து நியாயாதிபதியாய் சீக்கிரமாய் வரப்போகிறார். நாம் விழிப்புடனும், நம்பிக்கையுடனும், ஆவலுடன் காத்திருக்க வேண்டும். மனவாளனுக்கு ஆயத்தப்பட்டிருக்கும் மணவாட்டியைப் போல திருச்சபையை தம்மோடு எடுத்துக்கொள்வார். நாமும் பங்குள்ளவர்களாகக் காணப்பட முயலுவோம்!

**திருமதி. ஷர்மிளா ராஜேஷ்**

# CHILDREN'S CORNER

Dear Children,

The theme this March is "**SPECIALITY OF WOMEN IN BIBLE**".



The Lord used women throughout biblical history to bring Himself glory and lead up to the story of salvation we see in the New Testament.

The Bible has lots of stories of incredible women.



Strong and brave women who led armies and challenged kings. E.g. Queen Esther



Prophetesses who heard and obeyed the voice of God. E.g. Deborah



Wise women who made difficult decisions and led the people back to God. E.g. Deborah



Loyal women who stayed faithful to God even when their situations seemed perilous. E.g. Ruth



Women who did the right thing no matter what everyone else was doing, and changed the course of history forever. E.g. Rahab



The women of the Bible often faced incredible hardship and adversity, but they were never deterred. E.g. Sarah



Through their faith and perseverance, they accomplished incredible feats that continue to give us hope and strength today. E.g. Rachel

## RIGHT ROLE MODELS

There are many secular role models in the world today. Some of them are good, while some are not so good. We need to go back to the Bible today, to be inspired by Great women who were used by God mightily, to achieve His Grand design and purpose.

## MAJOR BIBLE EVENTS #3 CATASTROPHE


As time went by, people's hearts became wicked, and they did things that displeased



their Creator. Only one righteous man, Noah, found favor in God's eyes. God told Noah that He would send a great flood to destroy the entire earth by covering it with water.

When the ark was ready, God brought two of every animal into the Ark. Then the rains fell for 40 days and nights.

## GOD'S PROMISE



After the floods receded, Noah built an altar to the Lord, sacrificing one of each of the clean animals. God promised **never to flood the entire earth again**. The sign of this promise is the rainbow we see today.

## CHILDREN IN THE BIBLE #3

## NAAMAN'S SERVANT GIRL




Living in a foreign land, this young slave girl had amazing faith in God, and concern for others.

She showed compassion for her master Naaman-— the king's army commander who had leprosy, and offered information about Elisha, which she thought might help. Naaman was





healed when he followed the commands.

This entire story, with political leaders and God's own prophet Elisha, hinges on the voice of one small girl.


**Daily Application** - With God's power, we don't have to do loud or flashy things to help people.

Naaman' s servant girl was brave enough to show God's love to an enemy, and that allowed God to **change a heart and a nation**. What could he do through you?

## SAYING IT WITH PICTURES...




For we are God's workmanship, created in Christ Jesus to do good works, which God prepared in advance for us to do.
— Ephesians 2:10 NIV




After his suffering, he showed himself to these men and gave many convincing proofs that he was alive. He appeared to them over a period of forty days and spoke about the kingdom of God.
— Acts 1:3 NIV


## TINY TOTS SECTION


### COLOR IN...



I praise you because I am fearfully and wonderfully made. Ps. 139:14

## HELP THE ANIMALS FIND THE WAY TO NOAH'S ARK





# NAAMAN AND THE SERVANT GIRL

**COLOR THE VESSELS THAT SHOW THE SERVANT GIRL HELPING OTHERS**






Elisha with Naaman

1. Was the king of Israel upset when he read the letter about Naaman?




2. Where did Elisha tell Naaman to wash?




3. How many times was Naaman supposed to dip into the water?




4. How did Naaman feel about what he was told to do?




5. Was Naaman cured by doing exactly what Elisha said to do?



# OLDER CHILDREN SECTION

## CHOOSE THE CORRECT OPTION – 'WOMEN IN THE BIBLE' QUIZ

1. How many books in the bible are named after women?

| | | | |
|---|---|---|---|
| a. | One | b. | Two |
| c. | Three | d. | Four |

2. Name a woman in the bible who had a business selling purple cloth? (Acts 16:14)

| | | | |
|---|---|---|---|
| a. | Tabitha | b. | Dorcas |
| c. | Lydia | d. | Priscilla |

3. Who was the first woman and mother from whom all mankind came?

| | | | |
|---|---|---|---|
| a. | Eve | b. | Sarah |
| c. | Mary | d. | Miriam |

4. Which woman was a gentile and the great-grandmother of King David?

| | | | |
|---|---|---|---|
| a. | Rebekah | b. | Ruth |
| c. | Rachel | d. | Rahab |

5. Who is the only woman whose age of death is recorded in the Bible? (Gen. 23:1)

| | | | |
|---|---|---|---|
| a. | Sarah | b. | Jemima |
| c. | Gomer | d. | Claudia. |

6. Who was the only woman judge over ancient Israel? (Judges 4;5)

| | | | |
|---|---|---|---|
| a. | Ruth | b. | Naomi |
| c. | Miriam | d. | Deborah |

7. She used her money to help Jesus and his followers. (Luke 8:3)

| | | | |
|---|---|---|---|
| a. | Julia | b. | Milcah |
| c. | Joanna | d. | Phoebe |

8. Who was the first woman in the bible to give birth to twins? (Gen. 25:19;20)

| | | | |
|---|---|---|---|
| a. | Salome | b. | Abigail. |
| c. | Bernice | d. | Rebekah |

9. Who was Timothy's grandmother, who was commented for her faith? (2 Tim. 1:5)

| | | | |
|---|---|---|---|
| a. | Lois | b. | Eunice |
| c. | Candace | d. | Bernice |

10. Who was the 84 yr. old prophetess who saw baby Jesus in the temple? (Lk.2:37)

| | | | |
|---|---|---|---|
| a. | Anna | b. | Mary |
| c. | Elizabeth | d. | Dinah |

11. Who was Aquila's wife who worked with Paul in making tents? (Romans 16:3)


| | | | |
|---|---|---|---|
| a. | Zipporah | b. | Sapphira |
| c. | Priscilla | d. | Keziah |

12. Who did Lazarus' sister? (John 11)

a. Martha b. Magdalene c. Milcah d. Miriam


## TEEN – POINTS TO PONDER




**ANS(Gen.7:16):**

______________




**ANS (Ex.20:8-11):**

______________

______________

# THE LENTEN SEASON



Lent is the time of year when Christians prepare for Easter. The word Lent comes from an older English word meaning "springtime."

Lent begins on Ash Wednesday. It lasts for 40 days, not counting Sundays, and ends the day before Easter.





During Lent, many Christians fast, or go without regular meals. They do this in memory of Jesus Christ, who fasted for 40 days in the wilderness.

Christians also spend time in prayer, give money to charities, and give up some of the things they might otherwise do for pleasure.

Traditionally, the colour of Lent is purple, as this colour symbolically represents mourning and royalty.

Lent is an important period of reflection, growth, and new beginnings in the Christian calendar.

## What did Jesus say on the Cross? Fill in the puzzle to find the answer…



# HOLY WEEK

The Holy Week, also known as the Passion Week, is the week before Easter. The Holy Week recounts **the final days of Jesus' life** on this earth including his Death, Burial, and Resurrection.



## PALM SUNDAY

A celebration of Jesus fulfilling the prophecy from Zechariah with his triumphal entry into Jerusalem. We celebrate Christ as King .



## MAUNDY THURSDAY

Maundy Thursday honors the Last Supper that Jesus had with His disciples. Churches celebrate Maundy Thursday by taking Communion.



## GOOD FRIDAY

Good Friday is marked by reflections on the death of Christ. When we meditate on what Jesus did for us, we are reminded of Jesus' suffering.




Jesus experienced the ultimate separation from God so that we will never have to experience that.



## EASTER SUNDAY

The Holy Week leads up to the celebration of Jesus' triumph over death on Easter Sunday.

The Resurrection gives us hope that one day we will also have eternal life with God!



## The Word Alive

What words can you make using the letters in ***RESURRECTION***? List them below.

## The Perfect Fit

Circle the word that belongs in each sentence.

The governor's soldiers made a crown of ______ and put it on His head. **(flowers / thorns)**

Then they mocked Him: "Here is the ______ of the Jews!" **(boss / King)**

The ______ nailed Jesus to a cross. **(soldiers / criminals)**

Jesus cried out, "My God, why have You ______ Me?" **(laughed at / forsaken)**

One of the men guarding Jesus' body said, "This man really was God's ______!" **(Son / enemy)**

On the third day, Mary Magdalene and the other Mary went to the ______. **(garden / tomb)**

An angel of the Lord rolled back the stone and ______ on it. **(sat / spat)**

The angel spoke to the women, "Jesus is not here. He has ______." **(died / risen)**

Just then Jesus greeted them. "Don't be ______," Jesus told them. **(afraid / mad)**

Jesus appeared to more than ______ people who followed Him. **(500 / 5 million)**

Jesus is ______! **(missing / alive)**

## Hope You Enjoyed All the Activities. Complete The Short Review Below…

1. The theme for the month of March is: ________________________________.
2. What did God promise after the flood? ________________________________
   ____________________________________________________________.
3. What did the little servant girl's faith, allow God to do? ____________________
   ______________________________________.
4. LENT lasts for ___________ days, starting from __________________________
   and ending on ________________________________.
5. Three practices during LENT are: 1. ________ 2. __________ and 3. __________.
6. The Holy week recounts ________________________________________.

Children, let us grow closer to God this Lent season, with the help of the Holy Spirit.

God bless,

**Mrs. Briliya Jeyaseelan**.

## Answers to February Children's Corner

### CHOOSE THE CORRECT OPTION – Genesis Chapters 1;21;22

1. b. Serpent
2. a. Eve
3. b. Serpent
4. b. All the days of its life
5. b. It would bruise Serpent's head.
6. c. Miriam
7. b. 3 months.
8. a. Make a basket; put him in the Nile
9. c. Bring a woman to nurse the baby?
10. d. All of the above.
11. d. Jesus Christ.
12. d. Now.

## Hope You Enjoyed All the Activities. Complete The Short Review Below…

7. The theme for the month of February is: **A TIME FOR RECONCILIATION.**
8. To be reconciled to God means **to be restored to a right relationship with him**.
9. How you can receive Christ 1. _**CONFESS**_; 2. _**REPENT**_; 3. _**BELIEVE**_; 4. **INVITE**__ - You are now Reconciled with God.
10. 2 Corinthians 6:2 says – **Behold, now is the favorable time; behold, now is the day of salvation.**
11. _**JESUS CHRIST**__ is the Promised Savior, send by God.

# வேத வினாக்கள்

**வேதாகமம் முழுவதும்**

**(சரியான விடையை திருமறை ஆதாரத்தோடு எழுதவும்)**

1. மகா புத்திசாலியும் ரூபவதியுமாயிருந்த ஸ்திரீ யார்?
2. பார்வைக்கு மிகுந்த அழகுள்ளவளாயிருந்த ஸ்திரீ யார்?
3. இயேசுவிடம் தன் உண்மையையெல்லாம் சொன்ன ஸ்திரீ யார்?
4. தன் தகப்பனிடம் இரண்டு மாதம் தவணை கேட்ட ஸ்திரீ யார்?
5. ஏழு வருஷம் தன் புருஷனுடனே வாழ்ந்த ஸ்திரீ யார்?
6. இரண்டு சேனையின் கூட்டத்துக்குச் சமானமான ஸ்திரீ யார்?
7. கர்த்தரை விசுவாசித்திருந்த ஸ்திரீ யார்?
8. கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஸ்திரீ யார்?
9. அங்கிகளைச் செய்து வந்த ஸ்திரீ யார்?
10. ஏழு வருஷம் சஞ்சரித்த ஸ்திரீ யார்?
11. இரட்டுப் புடவையை எடுத்துப் பாறையின் மேல் விரித்த ஸ்திரீ யார்?
12. பல வருணமான வஸ்திரத்தை உடுத்தியிருந்த ஸ்திரீ யார்?
13. வனாந்திரத்திற்கு ஓடிப்போன ஸ்திரீ யார்?
14. இரத்தாம்பரம் விற்று வந்த ஸ்திரீ யார்?
15. சொப்பனத்தில் வெகு பாடுபட்ட ஸ்திரீ யார்?
16. தருமங்களை மிகுதியாய் செய்து வந்த ஸ்திரீ யார்?
17. கொல்ல வந்தவனை கொலை செய்த ஸ்திரீ யார்?
18. இரத்தாம்பரம் தரித்திருந்த இரு ஸ்திரீகள் யாவர்?
19. இரட்டைப் பிள்ளைகளைப் பெற்ற இரு ஸ்திரீகள் யாவர்?
20. இரண்டு புருஷர்களுக்கு மனைவிமாராயிருந்த நான்கு ஸ்திரீகள் யாவர்?

---

குறிப்பு : ***அந்தந்த மாதத்திற்குரிய வேத வினாக்களின் பதில்களை அந்தந்த மாதத்தில், 25-ம் தேதிக்குள் எழுதி ஆயரிடம் அல்லது ஆயரம்மாவிடம் ஒப்படைக்கவும்.***

# பிப்ரவரி மாத வேத வினாக்களுக்கான பதில்கள்

| கேள்வி எண் | பதில் | திருமறை ஆதாரம் புதிய ஏற்பாடு முழுவதும் |
|---|---|---|
| 1 | சமாதானத்தை | கொலோ. 1:20 |
| 2 | அவருடைய தாயும், அவருடைய தாயின் சகோதரி கிலெயோப்பா மரியாளும், மகதலேனா மரியாளும் | யோவான் 19:25 |
| 3 | பகையை | எபே. 2:16 |
| 4 | பாவங்களை | 1 பேதுரு 2:24 |
| 5 | தமக்குமுன் வைத்திருந்த சந்தோஷத்தின்பொருட்டு | எபி. 12:2 |
| 6 | தேவனால் மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டவருமாய் இருக்கிற நசரேயனாகிய இயேசுகிறிஸ்து | அப்.4:10 |
| 7 | சோதோம் என்றும் எகிப்து என்றும் ஞானார்த்தமாய்ச் சொல்லப்படும் மகாநகரம் | வெளி. 11:8 |
| 8 | நம்முடைய பழைய மனுஷன் | ரோமர் 6:6 |
| 9 | ஒரு தோட்டமும், புதிய கல்லறையும் | யோவான் 19:41 |
| 10 | சிரேனே ஊரானாகிய சீமோன் | மாற்கு 15:21 |
| 11 | மனுஷகுமாரன் | மத்தேயு 26:2 |
| 12 | பிலாத்து, இயேசுவை | யோவான் 19:13, 16 |
| 13 | மகதலேனா மரியாளும் மற்ற ஸ்திரீகளும் | மத் 28:1,5 |
| 14 | பிலாத்து ஒரு மேல்விலாசத்தை | யோவான் 19:19 |
| 15 | மூன்றாம்மணி | மாற்கு 15:25 |

## பிப்ரவரி மாத வேத வினாக்களுக்கு பதிலளித்தவர்கள்

1. Mrs. Abisha Grace Rejin
2. Mrs. Ajita Ebi
3. Mr.Emmanuel
4. Mrs. Esther Pauline Rani
5. Mrs. Febell Jeevagi Thomas
6. Mrs.Geetha kannan
7. Mrs.Grace shekar
8. Mrs.Kishi Maher
9. Mrs.Jebaseeli Asir
10. Mrs. Jenila Gannraj.L
11. Mrs.Jasmine Sobha
12. Mrs.Manuel Sarah
13. Mr.Salin Robert
14. Mrs.Sheeba merlin
15. Mrs.Sheeba Herlin
16. Mrs. Subija Jino
17. Mrs . Sharmila Rajesh
18. Mrs .Priya Ranjith Kumar
19. Mr. Prawin Durai Sam
20. Mrs.Blessy Lipny
21. Mrs.Helen Sharmila Ray

## Children who answered February Quiz

1. Aadhav Steve Matthew
2. Adelyn Victoria Jeyaseelan
3. Camryn Robert.S
4. Clement Dave
5. Evelyn Gracia
6. Galvin Robert.S
7. Gabrilyn Hannah
8. Giana Elin
9. Jevlyn Ana
10. Jerilyn Pushpam Nelson
11. Johan Sam Manuel
12. Joha Anit Manuel
13. Jeya Jehosheba Maher
14. Jeya Joshua Maher
15. Jen Scudd
16. Jim Scott
17. Johanan Paul Jino
18. Joanna Paul Jino
19. Kavin Immanuel
20. kavi Yalini
21. Liana Erin
22. Starlyne Noble
23. Jebasheba .M
24. Joshuva koshy
25. Leona Juliet
26. Hadriel Adventier
27. Yedidiah Arun (Ruwais)

***Note :*** ***Submit the answers of Bible Quiz to Pastor uncle or aunty on or before 25th of every month.***

# கோதுமை மணி

## அருட்திரு. Sr. ஈடித் பெல் மார்கன்



***இந்திய மண்ணின் விடுமுறை வேதாகமப் பள்ளியின் முன்னோடி***

***14-06-1912 – 20-01-1997***

---

**VBS இயக்குநர்கள் பயிற்சி பாசறை**

பெரேயாவின் மக்கள் பட்டியல் நீண்டு வளர்ந்த நாட்களில் அதன் ஊழிய விருட்சம் காய்த்துக் கனிய ஆரம்பித்தது. முப்பது ஆசிரியர்களோடு ஆரம்பிக்கப்பட்ட VBS இயக்குநர்கள் பயிற்சி பாசறை 300-க்கும் மேற்பட்ட பயிற்சியாளர்கள் கொண்ட முகாமாயிற்று. ஈடித்தின் அமெரிக்கக் கோடைமுகாம்களில் நடந்தது போல் மெழுகுவர்த்தி ஏந்தி அர்ப்பணிப்பு அறிக்கையிடும் "காண்டில் லைட்" ஆராதனையும், சாட்சி நேரமும் பயிற்சியாளர் பாசறையின் மறக்க முடியா அம்சங்களாகும். சபைக்கு ஒருவரோ இருவரோ இந்த பயிற்சி பாசறைக்கு அனுப்பப்பட்டனர். வேத வரலாற்றுச் சம்பவங்கள், ஊழியர் வாழ்க்கைச் சரிதைகளைப் பற்றி பயிலுவதோடு, இவைகளைத் தங்கள் இடங்களில் எந்தெந்த முறைகளில் கற்றுக் கொடுப்பதென்ற பயிற்சியும் பெற்றனர். உற்சாகமூட்டும் செய்கைப் பாடல்களின் அரங்கேற்றம், குழுக்களின் செயல்முறைப் படைப்பாய் படைக்கப்படும்.

இந்தப் பயிற்சிப் பாசறைக்கு இயக்குநர்களை அனுப்பமுடியாத சபைகளுக்கும் ஈடித், உதவும் திட்டம் ஒன்றை ஏற்படுத்தினார். VBS குடும்பங்கள், வேதாகமக் கல்லூரி மாணவர், திருச்சபை ஊழியர்கள், கிறிஸ்துவுக்கு வாலிபர் போன்ற இதர ஊழியர்களை ஒவ்வொரு இடத்தின் தேவைக்கும் ஏற்ற வண்ணம் அனுப்பி உதவினார். இப்படி அனுப்பப்படுபவர்கள் VBS TEAM என்று அழைக்கப்பட்டனர்.

பெரேயாவின் VBS பாடக் குறிப்பேடுகளும் பாடத்திட்டமும் பிகினர், ப்ரைமரி, ஜூனியர், இண்டர், சீனியர் என்று வயதிற்கேற்றபடி பிரிக்கப்பட்டு போதிக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின்படி பிகினர் வகுப்பு மாணவருக்கு வேதாகமக் கதைகளும், மனப்பாடமாகப் படிக்க சில சங்கீதங்களும் படிப்பிக்கப்பட்டன. ப்ரைமரி மாணவர்கள் வேறுசில வேதாகம நிகழ்ச்சிகளையும், சங்கீதங்களையும் பயின்றனர். ஜூனியர் மாணவர்களுக்கு சுவிசேஷங்களும், மனப்பாட வசனமாக சில சங்கீதங்களும் வேறு சில வசனங்களும் போதிக்கப்பட்டன. இன்டர்மீடியர் பிரிவில் பயிலும் மாணவர்கள் யாத்திராகமத்தில் சில அதிகாரங்களையும், ராஜாக்கள், அப்போஸ்தலர் நடபடிகளில் சில பகுதிகளையும், சங்கீதம் மற்றும் சில மனப்பாட வசனங்களையும் கற்றனர். சீனியர் மாணவர் தீர்க்கதரிசன புத்தகங்கள், யாக்கோபு நிருபம் இவைகளோடு சங்கீதம், இதர மனப்பாடப்பகுதிகளை அறிந்துகொண்டனர். பயிற்சி வகுப்புகள் இதமாகவும், இன்பமாகவும் அமைய ஒவ்வொரு மாணவருக்கும் செய்முறை வினாவிடை, படங்களுடன் கூடிய பாடப்புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டு, பயன்படுத்தப்பட்டன. ஆசிரியருக்கான பிரத்தியேக உதவிப் புத்தகங்களும் அச்சிடப்பட்டன.

வேதாகமப் பாடங்களை மூன்று ஆண்டுகள் கிரமமாகப் படிக்கும் வகையில் மூன்றாண்டு காலப் பாடத்திட்டம் உருவாக்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் ஒரு முக்கிய கருப்பொருளை மையமாக வைத்து பத்து நாட்களுக்கான தனித்தலைப்புகள் நிர்ணயிக்கப்பட்டன. இந்தத் தலைப்புகளை மையமாகக் கொண்டே வேதாகமக் கதைகள், பாடல்கள், பாடங்கள், வாழ்க்கை வரலாறுகள், இதரக் கதைகள் தெரிந்தெடுக்கப்பட்டன. பாடல்கள் பலவும், தலைப்புகளை மையமாகக் கொண்டு இயற்றப்பட்டன. ஒவ்வொரு பகுதியும் மிகச் சிறப்புப் பெற்றவை. கைவேலை, வர்ணம் தீட்டும் படங்களடங்கிய புத்தகம்,, செய்முறை பாடங்கள், மிஷனரி வரலாறு ஆகிய படைப்புகள் இவையணைத்தும் பொருட்காட்சி போல அனைவரின் பார்வைக்கும் வைக்கப்படுவதும், கிரீடம், கொடி, அலங்கார சைக்கிள், வண்டி இவைகளோடு VBS மாணவர் ஆசிரியர் ஊர்வலமாக VBS பாடல்களைப் பாடி வருவதும், ஆலயத்தின் முன் சிலுவைக்கொடி, தேசியக்கொடியேற்றி தேசிய உறுதிமொழி, கர்த்தருக்கு மகிமை சேர்க்கும் வாக்குகளை உறுதி மொழியாக அறிவிப்பதும் வெகு விமரிசையாக நடந்தன. VBS Badge, Crown, பாடல் புத்தகம், மனப்பாடப்பரிசு இவை சிறுவருக்கு உற்சாகம் தரும் சொத்துக்கள்.

**-தொடரும்**

## பாடல் பிறந்த கதை

***பூலோகத்தாரே யாவரும் [பாமாலை 9]***

***(All people that on earth do dwell)***



1. பூலோகத்தாரே யாவரும்
கர்த்தாவில் களி கூருங்கள்
ஆனந்தத்தோடே ஸ்தோத்திரம்
செலுத்திப் பாட வாருங்கள்.

2. பராபரன் மெய்த் தெய்வமே
நாம் அல்ல அவர் சிஷ்டித்தார்
நாம் ஜனம், அவர் ராஜனே
நாம் மந்தை, அவர் மேய்ப்பனார்.

*மிகவும் எளிமையான அதே நேரம் மிக அற்புதமான வடிவத்தில் அமையப்பெற்றிருக்கும் இப்பாடலானது ஆங்கிலத்தில் வெளிவந்த பாடல்களுள் மிகவும் பழமையான பாடலாகும். சங்கீதம் 100ன் மொழிப்புரையாய் அமையப்பெற்றுள்ள பாரம்பரியமிக்க இப்பாடல் இன்றளவும் நம் ஆலய ஆராதனைகளில் பாடப்பட்டு வருவது இதன் சிறப்பாகும். சீர்திருத்தத் திருச்சபை உருவான காலகட்டத்தில் பாடல் வடிவில் எழுதப்பட்ட முதல் சங்கீதம் இதுவே.*

*"பரிசுத்த வேதாகமத்தின் சங்கீதங்களின் அடிப்படையில் எழுதப்படும் பாடல்களே ஆலய ஆராதனைகளுக்கு உகந்தவை" என்ற கருத்தைக் கொண்டிருந்த ஜான் கால்வின் (John Calvin) எனும் பெயர்கொண்ட சீர்திருத்தவாதியின் வழி வந்த கவிஞர்கள் இத்தகைய பாடல்களை அக்காலத்தில் அதிகமாக எழுதி வந்தனர். 15ம் நூற்றாண்டில் ஸ்காட்லாந்து எல்லையில் வசித்துவந்த வில்லியம் கேத் (William Kethe) என்பவரால் இப்பாடல் எழுதப்பட்டது. வில்லியம் முதலில் ஃப்ராங்க்ஃபர்ட் எனும் நகரத்திலும், பின்னர் ஜான் கேல்வின் வசித்த ஜெனீவாவிற்கும் சென்று பரிசுத்த வேதாகமத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதிலும், சங்கீதங்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பாடல்களைப் புத்தகமாகத் தொகுப்பதிலும் தன்னை ஈடுபடுத்திக்கொண்டார்.*

*1561ம் ஆண்டு ஜெனீவாவில் முதன்முறையாக 'All people that on earth" பாடல் வெளியிடப்பட்டது. வில்லியம் கேத் இப்பாடலின் முதல் நான்கு பல்லவிகளை மட்டுமே*

*எழுதினார். ஐந்தாவதாகப் பாடப்படும் 'விண் மண்ணில் ஆட்சி செய்கிற' என்கிற Doxology என்றழைக்கப்படும் பல்லவி மெத்தடிஸ்ட் சபை உருவான துவக்கத்தில் 'கடவுள் துதி'யாக இணைக்கப்பட்டு பாடப்பட்டது. பெருவெள்ளம், புயல் போன்ற பேரழிவுகளின்பின்னரும் இந்த ஐந்தாம் பல்லவி, தம்மைப் பாதுகாத்தக் கடவுளுக்கு நன்றி சொல்லும் பாடலாகப் பாடப்பட்டது. இச்சரணத்தை தாமஸ் கென் (Thomas Ken) (1637-1711) என்பவர் எழுதினார்.*

*"All people that on earth" பாடலின் இரண்டாவது பல்லவியின் மூன்றாவது வரியில் வரும் "We are his folk" என்பதைக் குறித்த ஒரு சுவாரசியத் தகவலை Ian Bradley எழுதியுள்ள 'Book of Hymns" எனும் புத்தகத்தில் காண நேரிட்டது. 1561ல் இப்பாடல் வெளியிடப்பட்ட பின்னர் அநேக வருடங்களுக்கு இந்த மூன்றாவது வரி, "We are his flock" என்றே பாடப்பட்டு வந்தது. இதன் காரணம் முதன்முதலில் இந்தப்பாடல் அச்சிடப்பட்டபோது "folk" எனும் வார்த்தை பழைய ஆங்கில Spelling வழக்கத்தின்படி "folck" என்று அச்சிடப்பட்டது.*

*'Flock" எனும் வார்த்தையே "Folck" என்று Spelling Mistake'உடன் தவறாக அச்சிடப்பட்டது என்ற ஒரு எண்ணத்தாலும், சங்கீதம் 100:3ம் வசனத்தில் வரும் 'அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம்' என்ற வார்த்தைகளின் அடிப்படையில் 'We are his flock" என்று எழுதப்பட்டுள்ளது என்ற எண்ணிய காரணத்தாலும், இப்பல்லவியின் மூன்றாவது வரி Flock என்ற வார்த்தையுடனேயே அச்சிடப்பட்டுத் திருச்சபையினர் பாடிவந்தனர். ஏறக்குறைய மூன்று நூற்றாண்டுகளாக அவ்வார்த்தையை Flock என்றே திருச்சபையினர் பாடிவந்தனர். அநேக ஆண்டுகளுக்குப் பின்னர் 1904ம் ஆண்டு வெளியிடப்பட்ட 'Ancient and Modern' பாடல் புத்தகத்தில், இப்படி 'flock' என்று தவறாகப் பாடப்பட்டு வந்த வார்த்தை 'Folk" என்ற திருத்தத்துடன் வெளியிடப்பட்டது.*

*லூயி பர்காய்ஸ் (Louis Bourgeois) (1510-1560) என்பவர் இப்பாடல் பாடப்படும் "Old Hundredth" எனும் ராகத்தை அமைத்துள்ளார்.*

# ஆலய பக்கம்



## ஆராதனை மற்றும் நிகழ்வுகள் மார்ச் – 2024


| தேதி | நாள் | நேரம் | நிகழ்வுகள |
|---|---|---|---|
| 1 | வெள்ளி | 7.00 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 11.00 pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 2 | சனி | 10.30 am – 1.00 pm | உபவாச ஜெபம் - ஆயர் இல்லம் |
| 3 | ஞாயிறு | 11.00 am – 4.00 pm | Church Retreat |
| 5 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 8 | வெள்ளி | 7.00 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 10.15 pm | பெண்கள் ஆராதனை – St.Andrew's church |
| 10 | ஞாயிறு | 5.30 pm – 6.30 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் - முசாபா |
| 12 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 15 | வெள்ளி | 7.00 pm – 8.00 pm | Junior Church |
| | | 8.30 pm – 10.15 pm | தூய திருவிருந்து ஆராதனை – St.Andrew's church |
| 17 | ஞாயிறு | 7.00 pm – 8.00 pm | பெண்கள் ஐக்கிய சங்கம் & ஆண்கள் ஐக்கிய சங்கம் - ஆயர் இல்லம் |
| 19 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி |
| 22 | வெள்ளி | 8.30 pm – 10.15 pm | தூய ஆராதனை – St.Andrew's church |
| 24 | ஞாயிறு | 5.00 am – 7.00 am | குருத்தோலை ஞாயிறு ஆராதனை |
| 26 | செவ்வாய் | 8.00 pm – 9.00 pm | ஏரியா ஜெபக்குழு |
| 28 | வியாழன் | 8.00 pm – 10.00 pm | கட்டளை வியாழன் ஆராதனை |
| 29 | வெள்ளி | 8.30 pm – 11.00 pm | பெரிய வெள்ளிக்கிழமை ஆராதனை - St.Andrew's church |
| 31 | சனி | 11.45 pm | மாத இறுதி ஜெபம் |

# BIBLE READING FOR CHILDREN - MARCH 2024



| DATE | BIBLE PORTION | |
|---|---|---|
| 1.03.24 | Romans | 1 : 1- 5 |
| 2.03.24 | Romans | 1 : 6- 9 |
| 3.03.24 | Romans | 1 : 10- 14 |
| 4.03.24 | Romans | 1 : 15 - 19 |
| 5.03.24 | Romans | 1 : 20 - 24 |
| 6.03.24 | Romans | 1 : 25 - 28 |
| 7.03.24 | Romans | 1 : 29 - 32 |
| 8.03.24 | Romans | 2 : 1 - 5 |
| 9.03.24 | Romans | 2 : 6 - 10 |
| 10.03.24 | Romans | 2 : 11 - 15 |
| 11.03.24 | Romans | 2 : 16 - 20 |
| 12.03.24 | Romans | 2 : 21 - 25 |
| 13.03.24 | Romans | 2 : 26 - 29 |
| 14.03.24 | Romans | 3 : 1 - 6 |
| 15.03.24 | Romans | 3 : 7 - 12 |
| 16.03.24 | Romans | 3 : 13 - 19 |
| 17.03.24 | Romans | 3 : 20 - 26 |
| 18.03.24 | Romans | 3 : 27 - 31 |
| 19.03.24 | Romans | 4 : 1 - 5 |
| 20.03.24 | Romans | 4 : 6 - 9 |
| 21.03.24 | Romans | 4 : 10 - 13 |
| 22.03.24 | Romans | 4 : 14 - 18 |
| 23.03.24 | Romans | 4 : 19 - 25 |
| 24.03.24 | Romans | 5 : 1 - 5 |
| 25.03.24 | Romans | 5 : 6 - 10 |
| 26.03.24 | Romans | 5 : 11 - 15 |
| 27.03.24 | Romans | 5 : 16 - 21 |
| 28.03.24 | Romans | 6 : 1 - 6 |
| 29.03.24 | Romans | 6 : 7 - 13 |
| 30.03.24 | Romans | 6 : 14 - 17 |
| **31.03.24** | **Romans** | **6 : 18 - 23** |

# தினசரி வேத வாசிப்பு பகுதிகள் - மார்ச் 2024



| தேதி | நாள் | காலை | மாலை | | |
|---|---|---|---|---|---|
| 1 | வியாழன் | ரூத் | 1 : 1 - 22 | 1 தீமோ | 3 : 1 - 16 |
| 2 | வெள்ளி | ரூத் | 2 : 1 - 13 | 1 தீமோ | 4 : 1 - 16 |
| 3 | சனி | ரூத் | 3 : 1 - 18 | 1 தீமோ | 5 : 1 - 25 |
| 4 | ஞாயிறு | ரூத் | 4 : 1 - 22 | 1 தீமோ | 6 : 1 - 21 |
| 5 | திங்கள் | 1 சாமுவேல் | 1 : 1 - 14 | 2 தீமோ | 1 : 1 - 18 |
| 6 | செவ்வாய் | 1 சாமுவேல் | 1 : 15 - 28 | 2 தீமோ | 2 : 16 - 25 |
| 7 | புதன் | 1 சாமுவேல் | 2 : 1 - 17 | 2 தீமோ | 2 : 1 - 15 |
| 8 | வியாழன் | 1 சாமுவேல் | 2 : 18 - 36 | 2 தீமோ | 2 : 16 - 25 |
| 9 | வெள்ளி | 1 சாமுவேல் | 3 : 1 - 21 | 2 தீமோ | 4 : 1 - 22 |
| 10 | சனி | 1 சாமுவேல் | 4 : 1 - 22 | தீத்து | 1 : 1 - 16 |
| 11 | ஞாயிறு | 1 சாமுவேல் | 5 : 1 - 12 | தீத்து | 2 : 1 - 15 |
| 12 | திங்கள் | 1 சாமுவேல் | 6 : 1 - 13 | தீத்து | 3 : 1 - 15 |
| 13 | செவ்வாய் | 1 சாமுவேல் | 6 : 13 - 21 | பிலேமோன் | 1 : 1 - 25 |
| 14 | புதன் | 1 சாமுவேல் | 7 : 1 - 17 | எபிரேயர் | 1 : 1 - 14 |
| 15 | வியாழன் | 1 சாமுவேல் | 8 : 1 - 22 | எபிரேயர் | 2 : 1 - 18 |
| 16 | வெள்ளி | 1 சாமுவேல் | 9 : 1 - 17 | எபிரேயர் | 3 : 1 - 19 |
| 17 | சனி | 1 சாமுவேல் | 9 : 18 - 27 | எபிரேயர் | 4 : 1 - 16 |
| 18 | ஞாயிறு | 1 சாமுவேல் | 10 : 1 - 14 | எபிரேயர் | 5 : 1 - 14 |
| 19 | திங்கள் | 1 சாமுவேல் | 10 : 15 - 27 | எபிரேயர் | 6 : 1 - 20 |
| 20 | செவ்வாய் | 1 சாமுவேல் | 11 : 1 - 15 | எபிரேயர் | 7 : 1 - 15 |
| 21 | புதன் | 1 சாமுவேல் | 12 : 1 - 11 | எபிரேயர் | 7 : 16 - 28 |
| 22 | வியாழன் | 1 சாமுவேல் | 12 : 12 - 25 | எபிரேயர் | 8 : 1 - 13 |
| 23 | வெள்ளி | 1 சாமுவேல் | 13 : 1 - 12 | எபிரேயர் | 9 : 1 - 15 |
| 24 | சனி | 1 சாமுவேல் | 13 : 13 - 23 | எபிரேயர் | 9 : 16 - 28 |
| 25 | ஞாயிறு | 1 சாமுவேல் | 14 : 1 - 15 | எபிரேயர் | 10 : 1 - 22 |
| 26 | திங்கள் | 1 சாமுவேல் | 14 : 16 - 36 | எபிரேயர் | 10 : 23 - 39 |
| 27 | செவ்வாய் | 1 சாமுவேல் | 14 : 37 - 52 | எபிரேயர் | 11 : 1 - 20 |
| 28 | புதன் | 1 சாமுவேல் | 15 : 1 - 19 | எபிரேயர் | 11 : 21- 40 |
| 29 | வியாழன் | 1 சாமுவேல் | 15 : 20 - 35 | எபிரேயர் | 12 : 1 -14 |
| 30 | வெள்ளி | 1 சாமுவேல் | 16 : 1 -13 | எபிரேயர் | 12 : 15 - 29 |
| 31 | **சனி** | **1 சாமுவேல்** | **16 : 14 - 25** | **எபிரேயர்** | **13 : 1 -25** |

# ஆராதனை பாடல்கள் - மார்ச் 2024

| | |
|---|---|
| **01-03-24** | |
| பாமாலை - 03 | உன்னதம் ஆழம் எங்கேயும் |
| பாமாலை - 370 | எந்தன் ஆத்ம நேசரே |
| கீர்த்தனை – 207 | ஜெபம் மறவாதே |
| பாமாலை – 89 | என் நெஞ்சம் நொந்து |
| **08-03-24** | |
| பாமாலை - 1 | ஆத்மமே உன் ஆண்டவரின் |
| பாமாலை - 10 | போற்றிடு ஆன்மமே |
| கீர்த்தனை – 266 | ஆத்துமா கர்த்தரை துதிக்கின்றதே |
| பாமாலை – *மங்கள கவிகள் – 2* | கர்த்தர் தந்த ஈவுக்கா |
| **15-03-24** | |
| பாமாலை - 319 | உன் நெஞ்சிலே |
| பாமாலை - 105 | என்னுடைய சாவின் சாவே |
| கீர்த்தனை – 189 | என்னை ஜீவபலியாய் |
| பாமாலை - 102 | இரத்தம் காயம் குத்தும் |
| **22-03-24** | |
| பாமாலை - 333 | இயேசுவே கல்வாரியில் |
| பாமாலை - 97 | அன்புள்ள ஸ்வாமி |
| கீர்த்தனை – 226 | வீராதி வீரர் இயேசு |
| பாமாலை – *முடிவு கவிகள் - 4* | தெய்வ ஆசீர்வாதத்தோடே |
| **24-03-24 – குருத்தோலை ஞாயிறு** | |
| பாமாலை - 92 | ஓசன்னா பாலர் பாடும் |
| பாமாலை - 94 | தயாள இயேசு தேவரீர் |
| கீர்த்தனை – 41 | ஓசன்னா பாடுவோம் |
| பாமாலை – 91 | இஸ்திரீயின் வித்தவர்க்கு |

## ஆராதனை பாடல்கள் - மார்ச் 2024

| | |
|---|---|
| **28-03-24 – *கட்டளை வியாழன்*** | |
| பாமாலை - 187 | உம் அருள் பெற இயேசுவே |
| பாமாலை - 189 | என் மீட்பர் இயேசு |
| கீர்த்தனை – 260 | அன்பரின் நேசம் |
| பாமாலை – 114 | வாதையுற்ற மீட்பரே |
| **29-03-24 – *பெரிய வெள்ளிக்கிழமை*** | |
| பாமாலை - 107 | துக்கம் கொண்டாட வாருமே |
| பாமாலை - 115 | போற்றிடு ஆன்மமே |
| கீர்த்தனை – 116 | ஆத்துமா கர்த்தரை துதிக்கின்றதே |
| பாமாலை – 117 | கர்த்தர் தந்த ஈவுக்காக |
| பாமாலை – 118 | உன் நெஞ்சிலே |
| பாமாலை – 119 | என்னுடைய சாவின் சாவே |
| பாமாலை – 120 | என்னை ஜீவபலியாய் |
| பாமாலை – 121 | இரத்தம் காயம் குத்தும் |
| பாமாலை – 109 | இயேசுவே கல்வாரியில் |
| கீர்த்தனை – 58 | அன்புள்ள ஸ்வாமி |
| கீர்த்தனை – 57 | வீராதி வீரர் இயேசு |
| பாமாலை – 410 | தெய்வ ஆசீர்வாதத்தோடே |
| **31-03-24 – *உயிர்த்தெழுந்த திருநாள்*** | |
| பாமாலை – 126 | இன்று கிறிஸ்து எழுந்தார் |
| பாமாலை – 123 | அல்லேலூயா அல்லேலூயா |
| கீர்த்தனை – 324 | யூத ராஜ சிங்கம் உயிர்த்தெழுந்தார் |
| கீர்த்தனை – 59 | ஆமென் அல்லேலூயா |
| பாமாலை – 261 | எல்லாருக்கும் மா உன்னதர் |

## திருமறை பாட ஒழுங்குகள் - மார்ச் 2024

| தேதி | தியானப் பொருள் | பழைய ஏற்பாடு | நிருப வாக்கியம் | நற்செய்திப் பகுதி | சங்கீதம் |
|---|---|---|---|---|---|
| 01-03-24 | ஜெபத்தில் நிலைத்திரு | 2 இராஜா. 20 : 1 – 7 | 1 தெச. 5 : 12 – 22 | லூக்கா 18:1–8 | - |
| 08-03-24 | திருமறையில் பெண்கள் | நீதி. 31 : 10 – 31 | ரோமர் 16 : 1 – 16 | யோவான் 4:1–13 | 27 |
| 15-03-24 | விடுதலையளிக்கும் ஆராதனை | யாத். 3 : 11 - 18 | அப். 16 :25 – 34 | லூக்கா 13:10–17 | - |
| 22-03-24 | ஓசன்னா – இயேசுவே ராஜா | ஏசாயா 56 : 1 - 8 | 1 கொரி. 3:16-23 | மத்தேயு 21:1-17 | - |
| 28-03-24 | கட்டளை வியாழன் | யாத். 12 :12 - 20 | 1 கொரி. 11 :23 - 29 | யோவான் 6:47 -58 | - |
| 29-03-24 | புனித வெள்ளி | மத்தேயு 27:27-35 | - | - | - |
| 31-03-24 | உயிர்த்தெழுதலைக் கொண்டாடுதல் | யாத். 14 :5 - 18 | கொலோ. 3 :1 - 11 | மத்தேயு 28:1 -10 | - |

## செவ்வாய் கிழமை - ஏரியா ஜெபக்குழுவிற்கான வேத பாடங்கள்

| நாள் | வேத பகுதி | | ஆயர் Schedule |
|---|---|---|---|
| 05-03-24 | சங்கீதம் | 129-136 | TCA |
| 12-03-24 | சங்கீதம் | 137-144 | Al Wadha |
| 19-03-24 | ஒருங்கிணைந்த வேத ஆராய்ச்சி | | |
| 26-03-24 | சங்கீதம் | 145-152 | Hamdan |

# BIRTHDAY - MARCH




| Birth Date | Title | Name |
|---|---|---|
| 1 | Mr. | Radja Thomas |
| 1 | Mr. | Berlik Jacob |
| 2 | Ms. | Smitha. J |
| 3 | Mrs. | Jebakani Jeya. S |
| 4 | Ms. | Giana Elin |
| 4 | Ms. | Liana Erin |
| 5 | Baby | Leona Juliet. J. B |
| 8 | Ms. | Ielin Daisy Devashania |
| 8 | Ms. | S. Berenice Bright |
| 9 | Ms. | Miraclin Joy |
| 9 | Miss. | Ashika Y |
| 11 | Master | Jeffery Samvel |
| 12 | Baby. | Janey Jessica Yamuna Titus |
| 12 | Mr. | Wilfred Sumad San K |
| 12 | Mrs. | Jasmine Sobha |
| 13 | Mrs. | Shobana Milton |
| 13 | Mrs. | Christella |
| 13 | Mrs. | Steffi Prince |
| 14 | Ms. | Kerrylin Jinny J |
| 15 | Ms. | Shekin Daniel |

# BIRTHDAY - MARCH




| Birth Date | Title | Name |
|---|---|---|
| 17 | Ms. | Jaquiline Adalia |
| 18 | Mr. | Danial Abraham |
| 19 | Mr. | Selvin Daniel I |
| 19 | Mr. | Eugene Noble |
| 20 | Mrs. | Margaret Gladina S. |
| 20 | Baby. | Regan Paul Ebenezer |
| 20 | Mrs. | Jenipher Jesima Jebakumar |
| 20 | Mr. | Kevin Jaffe Kumar |
| 21 | Mrs. | Helen Johnson |
| 21 | Master | Nethan |
| 22 | Miss. | Jesse Grace |
| 23 | Mr. | Joshua Aoms Sam |
| 23 | Mrs. | Valentine Isabel Sharmila |
| 24 | Mrs. | Lincy Godwin |
| 24 | Ms. | Keren Tessa |
| 25 | Mr. | Selva Shaji |
| 25 | Mr. | Ajin Kumar K C |
| 25 | Mrs. | Pinky Ebulin |
| 25 | Mrs. | Teressa Jeyakumar |
| 26 | Mr. | John Surya A |
| 26 | Mrs. | Yamuna Agastian |
| 31 | Mr. | Joshua Jimson |
| 31 | Mr. | Easter Rajesh |

## WEDDING ANNIVERSARY – MARCH




| Wedding Date | Title | Name |
|---|---|---|
| 3 | Mr.&Mrs. | SAMUEL PRAKASHRAJ. R |
| 5 | Mr.&Mrs. | YESUDHAS M |
| 8 | Mr.&Mrs. | M. PERIYANNAN |

## NEW ARRIVAL



**இதோ பிள்ளைகள் கர்த்தரால் வரும் சுதந்தரம். சங்.127.4a**

| S.No. | Baby Name | Parent's Name |
|---|---|---|
| 1 | Rayhan Shalom Raj | Mr. Kishor Raj &<br>Mrs. Subi Mol Raja |

**கடந்த மாத தூது பத்திரிக்கைகளைப் படிப்பதற்கான இணைப்பு**



## லெந்துகால சிறப்பு நிகழ்ச்சிகள்

**சிறப்பு செய்தியாளர் -**

**அருட்திரு. இர்வின் சார்ல்ஸ்**

**தூத்துக்குடி - நாசரேத் திருமண்டலம்**

- **கன்வென்ஷன் - 01-03-24 & 02-03-24**
- **ஒடுக்கக்கூட்டம் - 03-03-2023**

## V.B.S. 2024





**V.B.S. – 2024**

**Date : 01-04-24 - 05-04-24**

**Place : St. Andrew's Centre – Community Hall**





Church picnic - ADNOC Beach club, Ruwaise



Medical Mission Service




INRI


RISEN
DEATH WHERE IS YOUR STING?